41490

அறபி போதினி

109

عربي کے دس سبق

تامل زبان میں

Publisher :

Khan Bahadur A. Abdul Kareem Saheb

President :

e-Tableegh-e-Quran-e-Hakeem

Madrasa-e-Muhammadi

wbrays Road, Madras-14

P28,9
N51
67934

அறபி போதினி

عربي زبان كے دس سبق

இயற்றியவர்:

மௌலானா அப்துஸ்ஸலாம் கித்வாயி (நத்வி)

MADRAS

தமிழாக்கம்:

மௌல்வி P. S. K. முஹம்மத் இப்ராஹீம் சாஹிப் (பாகவி)

உத்தமபாளையம்

பிரசுரகர்த்தர்:

கான் பஹாத்தூர் A. அப்துல் கரீம் சாஹிப்

தலைவர்:

'தஹ்ரீகே தப்லீகே குர்ஆனே ஹகீம்'

மத்ரஸயே முஹம்மதி

மௌபரீஸ் ரோடு, மதராஸ்–14

1951

விலை 6 அணா

முன்னுரை

நமது நாட்டு முஸ்லிம் மக்களிடையே நாளுக்குநாள் மதபக்தி குறைந்துகொண்டே வருவது யாவரும் அறிந்த விஷயமாகும். இதற்கு அவர்கள் 'திரு குர்ஆனைக் கற்றுணராது இருப்பதே' முக்கியக் காரணமாகும். ஆதலால் அந்தப் பரிசுத்த வேதத்தை அதன் சுய பாஷையாகிய அறபி மொழியைக்கொண்டே நம் நாட்டு மக்கள் படித்துணர்ந்துகொள்ள ஏதாவது ஒரு வழிகோல வேண்டும் என்பது எனது நீண்டநாள் அவா.

'அறபி மொழியை எளிதில் கற்றுக்கொள்ள முடியாது' என்ற எண்ணம், பொதுவாக நம் நாட்டு மக்களிடையே காணப்பட்டு வருகிறது. உபதேசத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு குர்ஆனை நாம் எளிய முறையில் அமைத்துள்ளோம்; (அதனைச்) சிந்தித்து உணருபவர் உண்டா? (54: 17) என்ற திரு குர்ஆன் வாக்கியத்தை நான் உற்று நோக்கியபொழுது, அறபி பாஷையை எளிதாகக் கற்றுக் கொள்ள முடியாது என்று பொதுமக்கள் எண்ணிக்கொண்டிருப்பது தவறாகும்; அவ்வாறு அவர்கள் கருதிக்கொண்டிருப்பதற்கு, தற்காலம் நமது நாட்டு வழக்கத்திலிருந்து வரும் புராதன அறபிப் போதனா முறையே காரணமாகும் என்ற முடிவிற்கு நான் வந்துவிட்டேன்.

எனவே அந்த பாஷையை எளிய முறையில் கற்பிக்கும் நவீன போதனாமுறைப் பாடப் புத்தகங்கள் பலவற்றை நான் வாங்கிப் படித்துப் பார்த்ததில் லக்னோ வாசியான மௌலானா அப்துஸ் ஸலாம் கித்வாயி (நத்வி) அவர்களால் எழுதப்பட்ட தஸ்ஹீலுல் என்னும் பாடப் புத்தகமும் அதனைத் தொடர்ந்து மூன்று புத்தகங்களும் என் உள்ளத்தை மிகக் கவர்ந்தன. எனவே அந்தக் கோர்வையில் முதல் புத்தகமான தஸ்ஹீலுல் என்பது அறபி பாஷையில் அதிகமான உபயோகத்தில் இருந்து வரும் பத்து இலக்கணப் பாடங்களை மட்டும் மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கிக் கூறும் நூலாக அமைந் திருக்கிறதானது எனக்கு மிக்கத் திருப்தியை அளித்தது.

அந்நூல் உர்தூவில் எழுதப்பட்டிருப்பதால் தமிழைத் தாய் பாஷையாகக்கொண்ட மக்களுக்குப் பயன்படுவதற்காக அதனைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும் என்று ஆர்வங்கொண்டு, இந்த போதனாமுறையை சென்னையில் பல இடங்களில் உர்தூ, தமிழ் ஆகிய இருபாஷைகளில் போதித்து அனுபவம் பெற்றவரும், உயரிய

இஸ்லாம் மத இலக்கிய வெளியீடாக, மதுரையிலிருந்து வெளிவரும் 'நூறுல்ஹக்' என்னும் சிறந்த செந்தமிழ் மாசிகையின் உதவியாசிரியரு மான உத்தமபாளையம் ஜனுப் மௌல்வி P. S. K. முஹம்மத் இப்ராஹீம் சாஹிப் அவர்களிடம் அந்நூலைத் தமிழில் மொழி பெயர்த்துத் தரும்படி நான் கேட்டுக்கொண்டேன். மௌல்வி சாஹிபவர்கள் யாவரும் சுலபமாகப் படித்துணர்ந்துகொள்ளும் முறையில் அதனை எளிய தமிழ்நடையில் மொழிபெயர்த்துத் தந்துள் ளார். அதற்காக அன்னருக்கு எனது நன்றி.

தமிழ் நாட்டு முஸ்லிம்கள் மத்ரஸாக்களிலும் பாடசாலைகளிலும் இதைப் பாடப்புத்தகமாக வைத்து நமது குழந்தைகளுக்குப் படித்துக் கொடுக்க முயற்சிப்பதுடன், பள்ளிவாசல்கள் தோறும் முதியோர் களுக்கும் வயது வந்தவர்களுக்கும் இதனைப் போதித்துக் கொடுக்க முன்வருவார்களாயின், இஸ்லாம் மதத்திற்கும் திரு குர்ஆனுக்கும் அவர்கள் ஒரு ஊழியஞ் செய்தவர்களாவார்கள் என்பதில் சந்தேக மில்லை.

(கான் பஹாத்தூர்) A. அப்துல் கரீம்.

முகவுரை

தஸ்ஸபக் என்ற பெயரால் உர்தூவில் எழுதப்பட்டுள்ள அறபி இலக்கண நூலின் தமிழ் மொழிபெயர்ப்பே இந்த அறபி போதினி என்பது. சென்னை பிரபல வர்த்தகரும் பொதுஜன உபகாரியுமான ஆலி ஜனுப் கான் பஹதூர் A. அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இச்சிறு நூலை நான் தமிழில் மொழி பெயர்த்துள்ளேன். இந்த அற்ப ஊழியத்தையாவது நான் செய்து முடிக்க உதவியாயிருந்த அன்னாருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். நான் மதராஸிலிருக்கும்போது அன்னார் எனக்குச் செய்த பல உபகாரங்களை நான் என்றென்றும் மறக்க முடியாது.

இந்நூலைப் பதிப்பிப்பதில் பல சிரமங்கள் நேர்ந்தன. அவை யாவற்றிலும் மிக முக்கியமானது அறபி எழுத்துக்களில் ஜேர், ஜபர், பேஷ் போன்ற உயிர்குறிகள் கொடுப்பதில் நேர்ந்த சிரமமாகும். இந்நூலைப் படித்துக் கொடுக்கும் ஆசிரியர்கள், ஏதாவது தவறுகளைக் கண்ணுறும்போது ஆங்காங்கே திருத்திக்கொள்ளும்படி வெகுவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மொழிபெயர்ப்பில், அல்லது கருத்து விளக்கத்தில் ஏதாவது தவறுதல்களைக் காணும் அறிஞர்கள், எமக்குத் தெரிவித்தால், மிக நன்றியுடனும் பணிவுடனும் அதை ஏற்று அடுத்த பதிப்பில் திருத்தி அமைத்துக்கொள்ளப்படும்.

இந்நூலின் தொடர்பைச் சேர்ந்த இன்னும் மூன்று பாடப் புத்தகங்கள், தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டியதிருக்கின்றன. அவைகளும் மொழிபெயர்க்கப்பட்டு நம் சிறுர்களுக்குப் போதிக்கப் பட்டுவிட்டால், அவர்கள் அறபி பாஷையில் பெரிய பண்டிதர்களாக விளங்காவிட்டாலும் ஐங்காலத் தொழுகைகளில் ஓதப்படும் திரு குர்ஆன் வசனங்கள், வெள்ளிக்கிழமை யன்று அறபி பாஷையில் நிகழ்த்தப்படும் குத்பா என்னும் மேடைப் பிரசங்கங்கள் முதலியவை களை ஓரளவு உணர்ந்துகொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. செல்வம் படைத்த முஸ்லிம் கனவான்கள் தங்கள் கவனத்தை இதன் பக்கம் செலுத்துவார்களா?

இந்த அறபி போதினிக்கு அநுபந்தம் (كَلِيدِ) அச்சிலிருக் கின்றது.

உத்தமபாளையம்,
20–10–1951.

P. S. K. முஹம்மத் இப்ராஹீம்,

பொருளடக்கம்

பக்கம்

1 ம் பாடம்: முப்ததா ஒ கபர்: 1
مُبْتَدَا و خَبَر
எழுவாய், பயனிலை (Subject and Predicate)

2 ம் பாடம்: முஜாப் ஒ முஜாப் இலைஹ்: 8
مُضَاف و مُضَاف اِلَيْه

3 ம் பாடம்: மாஜீ: 16
مَاضِي
இறந்தகால வினைச்சொற்கள் (Past tense)

4 ம் பாடம்: பெஅல். பாயில். மப்ஊல்: 19
فِعْل فَاعِل مَفْعُول
(Verb) (Subject) (Object)

5 ம் பாடம்: ஹுரூப் அல் ஜற்: 25
حُرُوف الجَرّ

6 ம் பாடம்: ஜமாயிர்: 33
ضَمَائِر
பிரதிப் பெயர் சொற்கள் (Pronouns)

7 ம் பாடம்: முஜாரிஉ: 41
مُضَارِع
எதிர்கால, நிகழ்கால வினைச்சொற்கள் (Future tense)

8 ம் பாடம்: ஸிபத் மவ்ஸூப்: 50
صِفَت مَوْصُوف
அடை மொழிகள் (Prefix)

9 ம் பாடம்: அமர்—நஹி: 59
اَمْر و نَهِي
ஏவல் உடன்பாட்டு வினை—ஏவல் எதிர்மறை வினை

10 ம் பாடம்: வாஹித். தஸ்னிய. ஜமஅ. 65
ஒருமை. இருமை. பன்மை.
وَاحِد - تَثْنِيَة - جَمَع

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அறபுப் பாஷையின் பத்துப் பாடங்கள்

முதற் பாடம்

Subject and Predicate

எழுவாய், பயனிலை مُبْتَدَأٌ وَخَبَرٌ

படித்தவன்	عَالِمٌ	பெயர்கள்	مَحْمُوْدٌ
நல்லவன்	صَالِحٌ		حَامِدٌ
ஜயசீலன்	فَاتِحٌ		خَالِدٌ
தூதர்	رَسُوْلٌ		مُحَمَّدٌ
நண்பன்	صَدِيْقٌ		نَاصِرٌ

மஹ்மூது படித்தவன்	مَحْمُوْدٌ عَالِمٌ
ஹாமிது நல்லவன்	حَامِدٌ صَالِحٌ
காலிது ஜயசீலன்	خَالِدٌ فَاتِحٌ
முஹம்மது தூதர்	مُحَمَّدٌ رَسُوْلٌ
நாஸிர் நண்பன்	نَاصِرٌ صَدِيْقٌ

மேலே எழுதப்பட்டுள்ள சொற்றொடர்களுக்கு எழுவாய், பயனிலே என்ற கருத்துக்கொண்ட "முப்ததா, கபர்" என்று அறபு பாஷையில் பெயரிடப்பட்டிருக்கிறது.

இத்தகைய வாக்கியத் தொடர்களின் முதல் வார்த்தைக்கு "முப்ததா" என்றும் இரண்டாம் வார்த்தைக்கு "கபர்" என்றும் சொல்லப்படும். அறபு பாஷையில் எழுவாய், பயனிலே என்ற இரண்டு வார்த்தைகளின் கடைசி எழுத்துக்களுக்கும் தோபேஷ் (ٌ) என்னும் குறிகள் இடப்படும்.

எழுவாயானது உதாரணங்களில் காட்டப்பட்டது போன்று ஒரு குறிப்பான பெயராக (Proper Noun) இல்லாமல் பொதுவான பெயர்ச்சொல்லாக (Common Noun) இருக்குமாயின் அதன் தலைப்பில் "அல் ال" என்னும் அட்சரத்தைச் சேர்த்துக்கொண்டு அதன் கடைசிஎழுத்திற்கு இரண்டுபேஷ்களுக்குப் (ٌ) பதிலாக ஒரு பேஷ் (ُ) மட்டுமே கொடுக்கப்படும். உதாரணமாக اَلرَّجُلُ عَالِمٌ இந்த மனிதன் படித்தவன்; என்பது போலாம். இந்த உதாரணத்திலே رَجُلٌ என்னும் பொதுப் பெயரானது எழுவாயாக வந்திருப்பதால் அதன் தலைப்பில் ال என்னும் அட்சரத்தைப் புகுத்தி இரண்டுபேஷ்களுக்குப் பதிலாக ஒரு பேஷ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று உணர்ந்துகொள்ளுக!

இனி அல் ال என்னும் அட்சரத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம்: ஆங்கிலத்தில் (the) என்ற

சொல்லை உபயோகப்படுத்துவதுபோல அறபு பாஷை யில் இந்த அட்சரம் உபயோகப்படுகிறது; என்று கூறி ஞல் ஆங்கிலம் படித்தவர்கள் எளிதில் உணர்ந்து கொள்ளுவர். ஆங்கிலம் படிக்காதவர்கள் இதைப் புரிந்துகொள்வது சற்று சிரமமே யாயினும் 'பொது வான அர்த்தத்தைத் தரும் ஒரு வார்த்தையைக் குறிப் பான அர்த்தம் தருவதாகச் செய்வதற்கு, அந்த வார்த்தையில் 'அல்' என்னும் உருபு புகுத்தப்படு கிறது; என்று உணர்ந்துகொண்டால் போதுமானது.

உதாரணமாக رَجُلٌ என்ற சொல்லிற்கு "ஏதாவதொரு மனிதன்" என்பது பொருளாகும். الرَّجُلُ என்பதற்கு "இந்த மனிதன்" என்பது பொருளாம். சில இடங் களில் "அல்" என்னும் உருபுக்கு "எல்லாம், யாவரும்" என்ற பொருள்களும் கொள்ளப்படுகிறது. الإِنْسَانُ என்ற வாக்கியத்திற்கு "மனிதர் யாவரும்" என்றும் الحَمْدُ என்பதற்கு "எல்லாப் புகழும்" என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.

கீழே வரும் சொற்றொடர்களை அறபு வாக்கியங்க ளாக மொழிபெயர்க்குக :—

1. ஹாமிது, தகப்பன்.
2. மஹ்மூது, மகன்.
3. காலிது, சிறிய தந்தை.
4. ஜைது, மாமன்.
5. பக்று, சகோதரன்.
6. ஸயீது, பாட்டன்.
7. ஹமீது, பேரன்.
8. ஹஸீப், மகள் வழிப் பேரன்.

9. இந்த மனிதன், பலவான்.
10. இந்தக் குழந்தை, பலவீனமானது
11. பனிக்கட்டி, குளிர்ச்சியானது.
12. இந்தத் தண்ணீர், இன்பமானது.
13. புதல்வன், புத்திசாலி.
14. சகோதரன், வணக்கக்காரன்.
15. தகப்பன், நல்லவன்.

இங்கே ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றுண்டு; அதாவது: முப்ததா வென்னும் எழுவாயானது பெண்பாலாக யிருக்குமாயின் கபர் என்னும் பயனிலையையும் பெண்பாலாகக் கொண்டு வர வேண்டும்; என்பதாம். அறபு பாஷையில் ஒரு பெயர்ச் சொல்லைப் பெண்பாலாக்க வேண்டுமென்றால் அச்சொல்லின் கடைசியில் பெண்பாலின் அறிகுறியான "ة" என்னும் எழுத்தைச் சேர்த்து விடவேண்டும். "இந்த மனிதன் நல்லவன்" என்பதற்கு اَلرَّجُلُ صَالِحٌ என்று சொல்லவேண்டும். அதுபோல "இந்தப் பெண்பிள்ளை நல்லவள்" என்று சொல்ல வேண்டுமாயின் اَلْمَرْأَةُ صَالِحَةٌ என்று சொல்லவேண்டும் அவ்வாறே "மகள், படித்தவள்" என்பதற்கு اَلْبِنْتُ عَالِمَةٌ என்று கூற வேண்டும்.

மேலே கூறியுள்ள சட்டப்படி கீழே தரப்பட்ட வாக்கியங்களை அறபு வாக்கியங்களாக மாற்றுக:—

1. தாயார், நல்லவள்.
2. புத்திரி, வணக்கமுடையவள்.
3. சிற்றன்னை, கூர்மையானவள்.
4. அத்தை, புத்திசாலி.

5. சகோதரி, அழகி.

6. பாட்டி, நன்றியுள்ளவள்

7. கோழி, சிறியது.

8. ஆடு, கொழுத்தது.

9. அத்தை, நல்லவள்.

10. அடிமைப் பெண், புத்திசாலி.

11. பாட்டி, நல்லவள்.

12. சிற்றன்னை, வணக்கமுடையவள்.

கீழ்கண்ட அறபு வாக்கியங்களைத் தமிழ்ப்படுத்துக:—

(١) اَللّٰهُ رَبٌّ

(٢) مُحَمَّدٌ نَبِيٌّ

(٣) اَلرَّسُوْلُ صَادِقٌ

(٤) اَلصِّرَاطُ مُسْتَقِيْمٌ

(٥) اَلْاِسْلَامُ دِيْنٌ

(٦) اَلْاِنْسَانُ عَبْدٌ

(٧) خَالِدٌ قَائِدٌ

(٨) اَلْاَخُ كَرِيْمٌ

(٩) اَلسَّاعَةُ اٰتِيَةٌ

(١٠) عَمْرٌو مُجَاهِدٌ

(١١) طَارِقٌ شُجَاعٌ

(١٢) اَلْبِنْتُ مُؤَدَّبَةٌ

(١٣) اَلْخَالُ عَاقِلٌ وَالْعَمُّ ذَكِيٌّ

(١٤) اَلْحَفِيْدُ مُؤَدَّبٌ وَالْجَدُّ رَحِيْمٌ

(١٥) اَلْاَمَةُ ذَاهِبَةٌ وَالشَّاةُ اٰتِيَةٌ

பொருள்	சொல்	பன்மை
தகப்பன்	أَبٌ	آبَاء
மகன்	إِبْنٌ	أَبْنَاءٌ
சிற்றப்பன்	عَمٌّ	أَعْمَامٌ
மாமன்	خَالٌ	أَخْوَالٌ
குழந்தை	طِفْلٌ	أَطْفَالٌ
தண்ணீர்	مَاءٌ	مِيَاهٌ
சகோதரன்	أَخٌ	إِخْوَانٌ . إِخْوَةٌ
பாட்டன்	جَدٌّ	أَجْدَادٌ
மகன்வழிப் பேரன்	حَفِيدٌ	أَحْفَادٌ
மகள்வழிப் பேரன்	سِبْطٌ	أَسْبَاطٌ
மனிதன்	رِجَالٌ	رَجُلٌ
பலவான்	قَوِيٌّ	أَقْوِيَاءُ
பனிக்கட்டி	ثَلْجٌ	,,
குளிர்ந்தது	بَارِدٌ	,,
இனிமையானது	عَذْبٌ	
தாய்	أُمٌّ	أُمَّهَاتٌ
நல்லவன்	صَالِحٌ	صُلَحَاءُ

பொருள்	சொல்	பன்மை
மகள்	بِنْتٌ	بَنَاتٌ
வணக்கமுடையான்	عَابِدٌ	عُبَّادٌ
சிற்றன்னை	خَالَةٌ	خَالَاتٌ
கோழி	دَجَاجَةٌ	دُجَجٌ
ஆடு	شَاةٌ	شِيَاهٌ
கூர்மையானவன்	ذَكِيٌّ	اَذْكِيَاءُ
அத்தை	عَمَّةٌ	عَمَّاتٌ
புத்திசாலி	عَاقِلٌ	عُقَلَاءُ
அழகன்	جَمِيْلٌ	...
சகோதரி	أُخْتٌ	اَخَوَاتٌ
பாட்டி	جَدَّةٌ	جَدَّاتٌ
நன்றியுள்ளவன்	شَاكِرٌ	...
அடிமைப் பெண்	اَمَةٌ	إِمَاءٌ
,, ,,	جَوَارِي	جَارِيَةٌ
மெய்யன்	صَادِقٌ	...
பாதை	صِرَاطٌ	...
நேரானது	مُسْتَقِيمٌ	...

பொருள்	சொல்	பன்மை
தொழுகை	صَلَوٰةٌ	
நிற்பது	قَائِمَةٌ	
அடியான்	عَبْدٌ	عِبَادٌ
வீரன்	شُجَاعٌ	شِجْعَانٌ
தளகர்த்தன்	قَائِدٌ	قُوَّادٌ - قَادَةٌ
இறுதி நாள்	اَلسَّاعَةُ	
வருவது	آتِيَةٌ	
ஒழுக்கமுள்ளவள்	مُؤَدَّبَةٌ	
போகிறவள்	ذَاهِبَةٌ	
சிறியது	صَغِيْرَةٌ	
கொழுத்தது	سَمِيْنَةٌ	

இரண்டாம் பாடம்

مُضَافٌ وَّ مُضَافٌ اِلَيْهِ

தூதரின் கட்டளை, மஹ்மூதின் எழுதுகோல், ஹாமிதுடைய வேலைக்காரன், காலிதுடைய புத்தகம், ஹாமிதின் வீடு முதலிய "இன், உடைய" என்ற பொருள் கொண்டுவரும் அறபிச் சொல் தொடர்களுக்கு "முலாப், முலாப் இலைஹி" என்று பெயர் சொல்லப் படுகிறது.

மேலே காட்டியுள்ள தமிழ் சொற்றொடர்களை அறபு வாக்கியங்களாக அமைக்க வேண்டுமாயின், முதன் முதலாக அந்தத் தமிழ் வாக்கியத்திலுள்ள "இன், உடைய" என்னும் பதங்களை நீக்கிவிடவேண்டும்; அப்பால், அவ்விரண்டு தமிழ் சொற்களையும் அறபுச் சொற்களாக மாற்றிக்கொள்ளவேண்டும். அதற்கப் பால், அவ்விரண்டு வார்த்தைகளில் இரண்டாம் வார்த் தையை முதல்வார்த்தையின் இடத்திலும் முதல்வார்த் தையை இரண்டாம் வார்த்தையின் இடத்திலுமாக மாற்றி அமைத்துவிடவேண்டும். உதாரணமாக: "மஹ்மூதின் எழுதுகோல்" என்னும் வாக்கியத்தை அறபு வாசகமாக மாற்றவேண்டுமாயின், முதன்முத லாக அவ்வாக்கியத்திலிருக்கும் "இன்" என்னும் பதத்தை நீக்கிவிட வேண்டும். பின்பு எழுதுகோல் என்ற பதத்தின் அறபு வார்த்தையான قَلَم என்னும் பதத்தை எழுதுகோல் என்னும் இடத்தில் வைக்க வேண்டும். அப்பொழுது محمود قلم என்றாகும். அதற்கப்பால் இரண்டாம் வார்த்தையாகிய "கலம்" என்பதை "மஹ்மூதின்" இடத்திலும், மஹ்மூது என் பதை கலம் என்னும் இடத்திலுமாக மாற்றி அமைத் துக்கொள்ளவேண்டும். அப்பொழுது قلم محمود என் றாகிவிடும்; அப்பால் قلم என்னும் சொல்லின் கடைசி எழுத்திற்கு ஒரு பேஷ் என்னும் குறியையும் இரண்டாம் வார்த்தையாகிய محمود என்னும் பதத்தின் கடைசி

எழுத்திற்கு "தோஜேர்" என்னும் குறியையும் கொடுத்து قَلَمُ مُحَمَّدٍ என்று சொல்லவேண்டும். இந்த சொற்றொடரின் முதல் வார்த்தைக்கு مُضَافُ என்றும், இரண்டாம் வார்த்தைக்கு مُضَافُ اِلَيْهِ என்றும் பெயர் சொல்லப்படும்.

அப்படிப்போலவே காலிதுடைய புத்தகம்; என் பதை كِتَابُ خَالِدٍ என்றும், ஹாமிதின் வேலைக்காரன்; என்பதை غُلَامُ حَامِدٍ என்றும், ஹமீதின் வீடு; என்பதை دَارُ حَمِيْدٍ என்றும் தங்க (ذَهَبُ) மோதிரம்; (خَاتَمُ) என்பதை خَاتَمُ ذَهَبٍ என்றும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

அல் ال என்னும் அட்சரம்பற்றி மேலே விவரித் துள்ளோம். இவ்விதமான இடங்களில் " ال " என் னும் அட்சரம் வருமாயின், இரண்டு ஜேர்களுக்குப் பதிலாக ஒரு ஜேர் மட்டுமே இடப்படும். உதாரண மாக: خَاتَمُ ذَهَبٍ என்ற சொற்றொடரின் ذَهَبٍ என்னும் பதத்தில் ال என்னும் அட்சரம் நுழைந்து விடுமாயின் خَاتَمُ الذَّهَبِ என்றே சொல்லவேண்டும்.

இங்கு ஒரு விஷயத்தை நன்கு மனதிற் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது: مُضَافْ என்று

சொல்லப்படும் முதல் வார்த்தையில் அல் ال என்னும் அட்சரம் நுழைந்துவர மாட்டாது. அதாவது: خَاتَم என்னும் சொல்லிற்குள் ال என்னும் அட்சரமானது பிரவேசிக்கவே மாட்டாது என்பதாம்.

கீழே தரப்பட்ட தமிழ் வாக்கியங்களை அறபு வாக்கியங்களாக மாற்றி யமைக்குக:—

1. வீட்டின் சுவர்.
2. வாசற் கதவு.
3. மண் குடம்.
4 அறையின் சன்னல்.
5. மர மேஜை.
6. வீட்டின் முகடு.
7. மெத்தைத் தளம்.
8. இரும்பு அலமாரி.
9. ஹமீதின் கட்டில்.
10. ஆசனத்தின் கால்கள்.
11. அடுப்பின் நெருப்பு.
12. செங்கல் தளம்.
13. சூரிய வெப்பம்.
14. பித்தளைக் கூஜா.
15. செம்புப் பானை.
16. பளிங்குச் சீசா.
17. பெயர்ப்புத் தாள், (காப்பிக் காகிதம்).
18. கம்பளித் தொப்பி.
19. துப்பாக்கிக் குண்டு.
20 கம்பளி மேஜோடு.
21. அலமாரியின் கண்ணாடி, விலையுயர்ந்தது.
22. மண் குடம், மலிவானது.
23. வீட்டுச் சுவர், நீளமானது.
24. வீட்டின் முகடு, உயரமானது.
25. செம்புக்கூஜா, விலையுயர்ந்தது.

(١) يَوْمُ الدِّينِ

(٢) رَيْبُ الْإِنْسَانِ

(٣) إِقَامَةُ الصَّلٰوةِ

(٤) إِيْتَاءُ الزَّكٰوةِ

(٥) إِنْفَاقُ الْمَالِ

(٦) لِقَاءُ الصَّدِيقِ

(٧) سُفَهَاءُ الْبَلَدِ

(٨) طُغْيَانُ النَّاسِ

(٩) إِسْتِيقَادُ النَّارِ

(١٠) ضَوْءُ السِّرَاجِ

(١١) حَوْلَ الْمَدِينَةِ

(١٢) ظُلْمَةُ اللَّيْلِ

(١٣) صَوْتُ الرَّعْدِ

(١٤) لَمَعَانُ الْبَرْقِ

(١٥) أَصَابِعُ الرَّجُلِ

(١٦) رِحْلَةُ الشِّتَاءِ وَالصَّيْفِ

(١٧) مَاءُ الثَّلْجِ بَارِدٌ

(١٨) خَشَبُ الْبَابِ ثَمِينٌ

(١٩) رَفُّ الْقِرْطَاسِ رَخِيصٌ

(٢٠) إِبْرِيقُ الصُّفْرِ ثَمِينٌ

(٢١) إِبْنُ الرَّجُلِ عَاقِلٌ —

பொருள்	சொல்	பன்மை
செம்பு	نُحَاسٌ	
ஜாடி, கூஜா	إِبْرِيقٌ	أَبَارِيقُ
தேக்சா, செம்புப்பானை	قِدْرٌ	قُدُورٌ
சூரியன்	شَمْسٌ	شُمُوسٌ
வெப்பம், சூடு	حَرٌّ	...
பளிங்கு, படிகம்	زُجَاجٌ	...
சீசா	قِنِّينَةٌ	قِنَانِ

பொருள்	சொல்	பன்மை
பெயர்ப்பு, (காப்பி)	كُرَّاسَةٌ	كَرَارِيسُ
காகிதம்	قِرْطَاسٌ	قَرَاطِيسُ
குல்லாய், தொப்பி	قَلَنْسُوَةٌ	قَلَانِسُ
துப்பாக்கி	بُنْدُقِيَّةٌ	بَنَادِقُ
துப்பாக்கிக் குண்டு	رَصَاصَةٌ	رَصَاصٌ
மேல் ஜோடு	جَوْرَبٌ	جَوَارِبُ
கம்பளி, உல்லன்	صُوْفٌ	أَصْوَافٌ
மலிவானது	رَخِيصٌ	...
விலையுயர்ந்தது	ثَمِينٌ	...
உயரமானது	رَفِيعٌ	...
பகரம்	دَيْنٌ	...
சந்தேகம்	رَيْبٌ	...
நிலைநிறுத்தல்	إِقَامَةٌ	...
தொழுகை	صَلٰوةٌ	صَلَوَاتٌ
கொடுத்தல்	إِيتَاءٌ	...
செலவிடுதல்	إِنْفَاقٌ	...
சந்தித்தல்	لِقَاءٌ	...

பொருள்	சொல்	பன்மை
வீடு	دَار	دِيَار - دُور
மதிள்	جِدَارٌ	جُدُرٌ
தலைவாயில்	بَابٌ	أَبْوَابٌ
கதவு	مِصْرَاع	مَصَارِعُ
களிமண்	طِيْنٌ	...
பானை	جَرَّةٌ	جِرَارٌ
வீட்டு அறை	حُجْرَةٌ	حُجُرَاتٌ
சன்னல்	شُبَّاكٌ	شَبَابِيكُ
மேஜை	مِنْضَدَةٌ	مَنَاضِدُ
மரம்	خَشَبٌ	خُشُبٌ
முகடு, கூரை	سَقْفٌ	سُقُوفٌ
வீடு	بَيْتٌ	بُيُوتٌ
மாடி, மெத்தை	سَطْحٌ	سُطُوحٌ
புளுதிமண்	تُرَابٌ	أَتْرِبَةٌ
இரும்பு	حَدِيدٌ	
அலமாரி	رَفٌّ	رُفُوفٌ
கட்டில்	سَرِيرٌ	أَسِرَّةٌ

பொருள்	சொல்	பன்மை
ஆசனம்	عَرْشٌ	عُرُوشٌ
மிருகம், நாற்காலி முதலியவைகளின் கால்கள்	قَائِمَةٌ	قَوَائِمُ
அடுப்பு	مَوْقِدٌ	مَوَاقِدُ
நெருப்பு	نَارٌ	نِيرَانٌ
பச்சைச் செங்கல்	لَبِنَةٌ	لَبِنٌ
சுட்ட செங்கல்	آجُرَّةٌ	آجُرٌّ
பித்தளை	صُفْرٌ	
இரவு	لَيْلٌ	لَيَالِي
சப்தம்	صَوْتٌ	أَصْوَاتٌ
இடி	رَعْدٌ	
மின்னுதல்	لَمَعَانٌ	
மின்னல், மின்	بَرْقٌ	بُرُوقٌ
விரல்	إِصْبَعٌ	أَصَابِعُ
கால்	رِجْلٌ	أَرْجُلٌ
தியாகி, போர்வீரன்	مُجَاهِدٌ	...
பிரயாணம்	رِحْلَةٌ	...
குளிர்	شِتَاءٌ	...

பொருள்	சொல்	பன்மை
வெய்யில்	صَيْف	
நண்பன்	صَدِيْق	أَصْدِقَاء
முட்டாள்	سَفِيْهَة	سُفَهَاء
நகரம்	بَلَدٌ	بُلْدَانٌ - بِلَادٌ
அட்டூழியம்	طُغْيَانٌ	...
மனிதர்	اَلنَّاسُ	...
எரித்தல்	إِسْتِيْقَادٌ	...
வெளிச்சம், சுடர்	ضَوْءٌ	أَضْوَاء
விளக்கு	سِرَاج	سُرُج
அக்கம் பக்கம்	حَوْل	...
பட்டணம்	مَدِيْنَة	مُدُن
இருள்	ظُلْمَة	ظُلُمَات

மூன்றாம் பாடம் ماضي

இறந்தகால (Past tense) வினைச்சொற்கள்

பெண்பால் படர்க்கை	ஆண்பால் படர்க்கை
فَعَلَتْ ஒருத்தி செய்தாள்	فَعَلَ ஒருவன் செய்தான்
فَعَلَتَا இரு பெண்கள் செய்தனர்	فَعَلَا இரு ஆடவர் செய்தனர்
فَعَلْنَ பெண்டிர் செய்தனர்	فَعَلُوْا ஆடவர் செய்தனர்

பெண்பால்	முன்னிலை	ஆண்பால்
فعلتِ நீ ஒருத்தி செய்தாய்		فعلتَ நீயொருவன் செய்தாய்
فعلتما நீங்களிருவர் செய்தீர்		فعلتما நீவிர் இருவர் செய்தீர்
فعلتنّ நீங்கள் செய்தீர்கள்		فعلتم நீங்கள் செய்தீர்கள்

தன்மை

நாங்கள் செய்தோம் فعلنا — நான் செய்தேன் فعلتُ

மேலே காட்டப்பட்ட வாய்ப்பாட்டை (صيغ) பொருள்களுடன் மனனஞ் செய்து கொள்ளுக!

கீழ்கண்ட அறபு வாக்கியங்களைத் தமிழாகவும் தமிழ் வாக்கியங்களை அறபாகவும் மொழிபெயர்க்குக:—

نصروا فتحت ضربتم دخلت وضع صنعت

ذهبنا ذهبتن ذهبتما كتبنا قرأت طبخنا اكلن

وصلت هربوا ذهبتم

அறபு பாஷையில் மொழிபெயர்க்க வேண்டியவை:—

நான் எழுதினேன். ஆடவர் யாவரும் படித்தனர். நீயொருவன் பெற்றுக்கொண்டாய். நீங்கள் எல்லாப் பெண்டிரும் சமைத்தீர்கள். பெண்டிர் யாவரும் நறுக்கினர். நாம் நிறைந்தோம். நீங்கள் யாவரும் (ஆடவர்) தேடினீர்கள். இரு ஆடவர் கேட்டனர். இரு பெண்கள் செய்தனர். நீயொருத்தி, வாங்கினாய். நீங்கள் இரு ஆடவர், சாப்பிட்டீர். அவள் நறுக்கினாள். நீங்கள் (பெண்டிர்) யாவரும் செய்தீர்கள். பெண்டிர் யாவரும் ஓடினர். நீ (ஆடவன்) போனாய். நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள்.

உதவி செய்தான்	نَصَرَ
அறுத்தான்	ذَبَحَ
நறுக்கினான்	قَطَعَ
திறந்தான்	فَتَحَ
எழுதினான்	كَتَبَ
நிறைந்தது	مَلَأَ
அடித்தான்	ضَرَبَ
சமைத்தான்	طَبَخَ
கேட்டான்	سَأَلَ
நுழைந்தான்	دَخَلَ
சேர்ந்தான்	وَصَلَ
செய்தான்	صَنَعَ
அமைத்தான்	جَعَلَ
ஓடினான்	هَرَبَ
பிடித்தான், வாங்கினான்	أَخَذَ
போனான்	ذَهَبَ
படித்தான்	قَرَأَ
கண்டான், பெற்றுக்கொண்டான்	وَجَدَ

நான்காம் பாடம்

அறபு பாஷையில் ஒரு அர்த்தத்தைத் தரும் வாக்கியத்தை அமைக்க வேண்டுமாயின், முதன்முதலாக فِعْل பயனிலையான வினைச் சொல்லையும் அப்பால் فَاعِل கருத்தாவையும் மூன்றாவது مَفْعُول செயப்படு பொருளையும் கொண்டு வரவேண்டும். அதுகாலை கருத்தாவாக வரும் சொல்லின் கடைசி எழுத்தின் மீது, இரண்டு பேஷுகளும் செயப்படு பொருளாக வரும் சொல்லின் கடைசி எழுத்தின் மீது இரண்டு ஜபர் (ً) என்னும் குறிகளும் இடப்படும். ஹாமிது "மஹ்மூதிற்கு உதவி செய்தான்" என்பது ஒரு அர்த்தமுள்ள வாக்கியமாகும்; இதில் 'உதவி செய்தான்' என்பதை فِعْل வினைச் சொல் என்றும் ஹாமிது என்பதை فَاعِل கருத்தா என்றும் மஹ்மூது என்பதை مَفْعُول செயப்படு பொருள் என்றும் சொல்லப்படும். இதை அறபு மொழியில் மொழிபெயர்க்க வேண்டுமாயின் உதவி செய்தான் என்ற வினைச் சொல்லின் அறபு மொழியான نَصَرَ என்பதை எழுதுவோம்; அப்பால் கருத்தாவான (فَاعِل) ஹாமிது என்பதை எழுதி அதற்கு இரண்டு பேஷுகளைக் கொடுத்து حَامِدٌ என்று அமைத்துக்கொண்டு مفعول செயப்படு பொருளான மஹ்மூது என்பதன் கடைசிக்கு இரண்டு ஜபர்களைக் கொடுத்து விடுவோம், எனவே அச்சொற்கள் யாவையும் ஒன்று சேர்த்தால் نَصَرَ حَامِدٌ مَحْمُوداً என்றாகி விடும். இன்னும் ஒரு சொற்றொடரை எடுத்துக் கொள்ளுவோம்; "வேலைக்காரன்

(خَادِمُ) தலைவாயிலை (بَابٌ) த் திறந்தான்." (فَتَحَ) இந்த வாக்கியத்தையும் மேலே காட்டப்பட்டிருக்கும் فعل - فاعل - مفعول என்ற முறைப்படி எழுதி கருத்தாவுக்கு இரண்டு பேஷ்களும் செயப்படு பொருளுக்கு இரண்டு ஜபர்களும் கொடுத்து فَتَحَ خَادِمٌ بَابًا என்று அமைத்து விடுவோம்.

இவ்வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களிலே ال என்னும் எழுத்தைச் சேர்க்கும்போது இரண்டு பேஷ், இரண்டு ஜபர்களை எடுத்துவிட்டு ஒரு பேஷ், ஒரு ஜபரைக் கொடுத்து فَتَحَ الْخَادِمُ الْبَابَ என்று சொல்லவேண்டும்.

கீழ்கண்ட வாக்கியங்களை, அறபு வாக்கியங்களாக மாற்றுக:—

ஹாமிது, புத்தகத்தை வாசித்தான். நஸீர், மஹ்மூதைத் தடுத்தான். காலிது, கடிதம் எழுதினான். தாரிக், எதிரியைத் தோற்கடித்தான். அவள், மாவைக் குழைத்தாள். மகள், கறியைச் சமைத்தாள். கூலிக்காரன், கோதுமையை அரைத்தான். மாமன், உரொட்டியைத் தின்றான். ஆடு, குழந்தையை முட்டிற்று. கோழி, அரிசியைத் தின்றது. நான், நாயை அடித்தேன். நீ, ஆண்டவனைத் தொழுதாய். பெண்டிர், கிளாஸை உடைத்தனர். நீ (பெண்பால்) துணியைக் கிழித்தாய். ஹமீதின் நண்பன், காலிதின் பேரனுக்கு உதவினான். மகளின் தாயார், பளிங்குக் கிளாஸை உடைத்தாள். வேலைக்காரி கோதுமை மாவைக் குழைத்தாள்.

கீழ்கண்ட அறபு வாக்கியங்களை தமிழில் மொழிபெயர்க்குக:—

جَعَلَ اللّٰهُ مُحَمَّداً رَسُولاً وَالْإِسْلَامَ دِيناً - جَعَلَ السَّمَاءَ بِنَاءً وَالْأَرْضَ فِرَاشاً - خَدَعَ الشَّيْطَانُ الْإِنْسَانَ - مَارَبِحَتْ تِجَارَةٌ سَمِعَتِ الْآذَانُ وَرَاَتِ الْعُيُونُ وَعَقَلَتِ الْقُلُوبُ - نَقَضَ الْفَاسِقُ عَهْدَ اللّٰهِ - سَمِعَ الْمُسْلِمُ كَلَامَ اللّٰهِ - ضَرَبَ رَجُلٌ مَثَلاً ذَكَرُوا نِعْمَةَ اللّٰهِ وَمَا كَفَرُوا - فَرَقْنَا الْبَحْرَ وَاَغْرَقْنَا آلَ فِرْعَوْنَ حَلَبْنَ الشَّاةَ وَحَلَبْتُنَّ الْبَقَرَةَ - ذَبَحْتُمُ الدِّيكَ وَطَبَخْتِ اللَّحْمَ اَنْزَلَ اللّٰهُ الْمَطَرَ وَاَنْبَتَ النَّبَاتَ وَالْأَثْمَارَ -

فَعَلَ என்பதற்கு "அவன் ஒருவன் செய்தான்;" என்பது பொருளாகும் என்பதை நீங்கள் படித்திருக்கின்றீர்கள். இத்தகைய வினைச் சொற்களுக்கு அறபியில் مَعْرُوف (Active voice) செய்வினைச் சொற்கள் என்று பெயர் சொல்லப்படுகிறது. இனி فَعَلَ என்பதன் முதல் எழுத்திற்கு பேஷும் இரண்டாவது எழுத்திற்கு ஜேரும் கொடுக்கப்பட்டால் அவ்வினைச் சொல்லானது فُعِلَ என்றாகி விடும்; அப்பொழுது அதற்கு مَجْهُول (Passive voice) செயப்பாட்டு வினை என்று பெயரிடப்படும். அதுகாலை அதன் பொருள் "அவன் செய்யப்பட்டான்" என்றாகி விடும்.

فُعِلَا فُعِلُوا فُعِلَتْ முதலியவைகளும் இத்தகைய செயப்பாட்டு வினைச்சொற்களே யாகும்.

கீழே தரப்பட்டுள்ள சில செயப்பாட்டு வினைச் சொற்களின் பொருள்களை விளக்குக:—

(١) ضَرَبُوا	(٢) نَصَرْتُ	(٣) ذَبَحَتْ
(٤) ظَلَمْتُ	(٥) قُطِعَ	(٦) نَظَرْتِ
(٧) مَنَعُوا	(٨) خَلَقْتُمْ	(٩) خَلَقْنَا
(١٠) حَبَسْتُمَا	(١١) وَجَدَتَا	(١٢) سُئِلْتُنَّ —

பொருள்	பதம்	பன்மை
விலக்குதல்	مَنْع	
எழுத்து	كِتَاب	
பகைவன், விரோதி	عَدُوّ	أَعْدَاء
தோற்கடித்தல்	هَزْم	
மாவு	دَقِيق	
குழைத்தல்	عَجْن	
மாமிசம், இறைச்சி	لَحْم	لُحُوم
கூலிக்காரன்	أَجِير	أُجَرَاء
கோதுமை	قَمْح	حِنْطَة - بُرّ
அறைத்தல்	طَحْن	
பையன், மகன்	وَلَد	أَوْلَاد

பொருள்	பதம்	பன்மை
உரொட்டி	خُبْز	
கொம்பால் முட்டுதல்	نَطْح	
இலாபம்	رِبْح	
செவியால் கேட்பது	سَمْع	
காது	أُذُن	آذَان
சிறைவைத்தல்	حَبْس	
பார்த்தல்	رُؤْت	
மூழ்கடித்தல்	إِغْرَاق	
கண்	عَيْن	عُيُوْن
அறிதல், உணர்தல் புத்தி	عَقْل	
ஞாபகஞ் செய்தல்	ذِكْر	
மனம், உள்ளம்	قَلْب	قُلُوْب
பார்த்தல்	نَظَر	
(வாக்கு) முறித்தல்	نَقْض	
துன்மார்க்கன்	فَاسِق	

பொருள்	பதம்	பன்மை
கோழி	دَجَاجَةٌ	دَجَاجٌ - دُجُجٌ
சேவல்	دِيكٌ	
அரிசி	أُرْزٌ	
நாய்	كَلْبٌ	كِلَابٌ
வணங்குதல்	عَبَدَ	
கிளாஸ்	كَأْسٌ	كُؤُوسٌ . كَاسَاتٌ
உடைத்தல்	كَسَرَ	
கிழித்தல்	خَرَقَ	
துணி, புடவை	ثَوْبٌ	أَثْوَابٌ ثِيَابٌ
செய்தல், ஆக்கல்	جَعَلَ	
வானம்	سَمَاءٌ	سَمٰوَاتٌ
கட்டடம், முகடு	بِنَاءٌ	
விரிப்பு, தளம்	فِرَاشٌ	
ஏமாற்றல்	خَدَعَ	
பின்பற்றுவோர்	آلٌ	
பிளத்தல், பிரித்தல்	فَرْقٌ	
கடல், சமுத்திரம்	بَحْرٌ	بِحَارٌ

பொருள்	பதம்	பன்மை
பசுமாடு	بَقَرَةٌ	بَقَرَاتٌ
கறத்தல்	حَلْبٌ	
மழை	مَطَرٌ	أَمْطَارٌ
பழம்	ثَمَرٌ	أَثْمَارٌ
செடி, கொடி	نَبَاتٌ	
படைத்தல், சிருஷ்டி	خَلْقٌ	
உயிர், ஆத்துமா	نَفْسٌ	أَنْفُسٌ. نُفُوسٌ
இறக்குவது	إِنْزَالٌ	
முளைக்கச் செய்தல்	أَنْبَتَ	

ஐந்தாம் பாடம்

حروف الجَرِّ

وَ ஆணையாக

إِلَي பக்கம், வரை (அதன் பக்கம்)

بِ ஆல், ஓடு, உடன் (அதனோடு)

كَ போல

مِنْ இருந்து, நின்று (அதிலிருந்து)

حَتَّي வரையிலும்

لِ வேண்டி, ஆக, கு (அவனுக்கு)

عَنْ இருந்து, விட்டு, பற்றி

عَلَي பேரில், மீது (அதன் மீது)

فِي அன், இல் (அதன், அதில்)

இந்த அட்சரங்கள் அறபி பாஷையில் (Preposition) உருபு இடைச் சொற்களாக உபயோகிக்கப் படுகின்றன. மேலும் இவை பெயர்ச் சொற்களுக்கு முன்னே கொண்டுவரப் படுகின்றன. இவை, தாம் அடுத்து வரும் பெயர்ச்சொல்லின் கடைசி யெழுத்திற்கு "ஜேர்" என்னும் உயிர்க் குறியைக் கொடுக்கும் தொழிலையுடையனவா யிருக்கின்றன. உதாரணமாக:-

مِنْ خَالِدٍ، اِلَى زَيْدٍ - مِنَ الْبَيْتِ - اِلَي الْمَسْجِدِ

جَلَسَ زَيْدٌ عَلَى السَّطْحِ ஜைது மாடிமீது அமர்ந்தான்;

என்பன போன்றும்.

இந்த வாக்கியங்களை அறபியில் மொழிபெயர்க்குக:—

1. ஜைது கிருமத்திலிருந்து நகரம் வரை வந்தான்.

2. மஹ்மூது புலியை வாளினுல் வெட்டினுன்.

3. நான் துணியைக் கத்தரிக்கோலினுல் கத்தரித்தேன்.

4. அந்தப் பெண்பிள்ளை கிண்ணத்தில் பால் கறந்தாள்.

5. நீங்கள் (ஆண்பால்) மேல் சட்டைகளையும் கால் சட்டைகளையும் பெட்டியில் வைத்தீர்கள்.

6. நீ (ஆண்பால்) பென்ஸிலினுல் கார்டில் எழுதினுய்.

7. அவர்கள் (பெண்பால்) வெண்ணெய், நெய், பாலேடுகளுடன் பிஸ்கத்தைத் தின்றனர்.

8. ஆண்டவன் மீது ஆணையாக!

9. ஆசிரியர் மாணவரிடத்தில் பாடத்தைப் பற்றிக் கேட்டார்.

10. அல்லாஹ், இரவை உறங்குவதற்காகவும் பகலை வேலை செய்வதற்காகவும் ஆக்கினான்.

11. எருமைப் பால் பசுவின் பாலைக் காட்டினும் வெண்மையானது.

12. துறவி யிடத்தில் தங்கமும் வெள்ளியும் கற்களைப் போன்றாம்.

13. நான் சூரியன் சந்திரன் ஆகியவைகளின் பக்கமாகப் பார்த்தேன்.

14. அவர்கள் (ஆண்பால்) பூட்டைத் திறவுகோலினால் திறந்தார்கள்.

15. நாங்கள் தோட்டத்தின் பக்கமாகப் போய் புல்லின்மீது உட்கார்ந்தோம்.

கீழ்க்கண்ட அறபு வாக்கியங்களைத் தமிழாக்குக:—

(١) اَلْحَمْدُ لِلّٰهِ -

(٢) فِي الْقُرْاٰنِ هُدًى لِلنَّاسِ -

(٣) اَلسَّحَابُ مُسَخَّرٌ بَيْنَ السَّمَاءِ وَالْاَرْضِ -

(٤) اَلسَّبْتُ لِلْيَهُوْدِ وَالْاَحَدُ لِلنَّصَارٰى -

(٥) قَرَأْتُ جُزْءًا مِنَ الْقُرْاٰنِ فِيْ يَوْمِ الْخَمِيْسِ وَالْجُمُعَةِ -

(٦) لِلْمُسْلِمِ فِي الدُّنْيَا حَسَنَةٌ وَفِي الْاٰخِرَةِ حَسَنَةٌ -

(٧) اٰمَنْتُ بِمَا اَنْزَلَ اللّٰهُ -

(٨) وَقَعَ الذُّبَابُ فِي الطَّعَامِ -

(٩) أُنْزِلَتِ الْاٰيَاتُ كَصَيِّبٍ مِنَ السَّمَاءِ -

(١٠) كُتِبَتِ الصلوة على المسلم ـ

(١١) فتحوا باب الحجرة يوم الاثنين و جلسوا على السرير يوم الثلثاء ـ

(١٢) كسرتن قنينة الزجاج بالآجرة يوم الاربعاء ـ

பொருள்	பதம்	பன்மை
கிருமம்	قرية	قرى
பட்டணம், நகரம்	مدينة	مدن
புலி, சிங்கம்	أسد	أسد
பால்	لبن	ألبان
வாள்	سيف	سيوف
கத்தரிக்கோல்	مقراض	مقاريض
கலயம், கிண்ணம்	قصعة	قصع قصعات
கல்	حجر	حجارة
காற்சட்டை; பைஜாமா	سروال	سراويل
பென்ஸில்	مرسم	مراسم
கார்டு	بطاقة	بطاقات

பொருள்	பதம்	பன்மை
வெண்ணெய்	زُبْدَة	زُبَد
நெய்	سَمْن	
பாலேடு	قِشْطَة	
பிஸ்கட்	كَعْكَة	كَعْك
ஆசிரியர்,உபாத்தியாயர்	أُسْتَاذ	أَسَاتِذَة
மாணவன்	تِلْمِيذ	تَلَامِيذَة
பாடம்	دَرْس	دُرُوس
பகல்	نَهَار	
வெண்மை நிறம்	أَبْيَض	
வேலை	عَمَل	أَعْمَال
எருமை	جَامُوس	جَوَامِيس
தங்கம்	ذَهَب	
வெள்ளி	فِضَّة	
சந்திரன்	قَمَر	أَقْمَار
நட்சத்திரம்	نَجْم	نُجُوم
திறவுகோல்	مِفْتَاح	مَفَاتِيح

பொருள்	பதம்	பன்மை
தோட்டம்	بُسْتَانٌ	بَسَاتِيْنُ
புல்	عُشْبٌ	أَعْشَابٌ
இடையில்	بَيْنَ	
சனிக்கிழமை	سَبْتٌ	
மேகம்	سَحَابٌ	سُحُبٌ
வசப்படுத்தப்பட்டது	مُسَخَّرٌ	
துண்டு, பாகம், பகுதி	جُزْءٌ	أَجْزَاءٌ
ஒன்று, அது, இல்லை, யாது	مَا	
இறக்கிவைத்தல்	إِنْزَالٌ	
அடைமழை, கனத்த மழை	صَيِّبٌ	
ஈ	ذُبَابٌ	
விழுதல், சம்பவித்தல்	وَقَعَ	
தூக்கம், உறக்கம்	نَوْمٌ	
ஞாயிற்றுக்கிழமை	يَوْمُ الْأَحَدِ	

பொருள்	பதம்	பன்மை
திங்கட்கிழமை	يَوْمُ الْاِثْنَيْنِ	
செவ்வாய்க்கிழமை	يَوْمُ الثُّلَثَاءِ	
புதன்கிழமை	يَوْمُ الْاَرْبَعَاءِ	
வியாழக்கிழமை	يَوْمُ الْخَمِيْسِ	
பெட்டி	صُنْدُوْقٌ	
சட்டை	قَمِيْصٌ	
பூட்டு	قُفْلٌ	

பெயர்ச் சொற்களை அடுத்து வந்து அந்தச் சொற்களின் கடைசி எழுத்துக்களுக்கு "ஜேர்" என்னும் குறியைக் கொடுக்கும் பத்து அட்சரங்களை உங்களுக்கு மேலே விவரிக்கப் பட்டுவிட்டது. இவை அறபு பாஷையில் அதிகமாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இவைகளைத் தவிர இன்னும் ஏழு அட்சரங்கள் இருக்கின்றன. அவைகளும் அதே தொழிலை யுடையனவாயினும் உபயோகத்தில் மிகச் சுருக்கமாகவே கையாளப் படுகின்றன; எனினும் அவற்றையும் தெரிந்து வைப்பது மாணவர்களுக்கு நன்மை

பயப்பதாக இருக்குமெனக் கருதி அவைகளையும் இங்கே விளக்கியுள்ளோம்.

تَ இந்த அட்சரம் "சத்தியமாக" என்ற பொருளைத் தரும்; அன்றியும் அது اَللّٰهِ என்ற வார்த்தை ஒன்றை மட்டுமே அடுத்துவரும். تَاللّٰهِ "அல்லாஹ்வின் மீது ஆணையாக!" என்பது அதற்கு உதாரணமாம்.

مُذْ - مُنْذُ இவ்விரண்டு உருபுகளுக்கும் "இருந்து" என்பது பொருளாம். காலம் என்ற பொருளிலேயே அவ்விரண்டையும் உபயோகிக்கப் படும்.

مَا ذَهَبْتُ إِلَى الْمَدْرَسَةِ مُنْذُ يَوْمِ الْجُمُعَةِ நான் வெள்ளிக் கிழமையிலிருந்து, பாடசாலைக்குப் போகவில்லை.

رُبَّ "எத்தனையோ" என்பது இதன் பொருளாகும். இந்த உருபு எக்காலமும் ஒருமையான பெயர்ச் சொல்லையே அடுத்துவரும். رُبَّ رَجُلٍ نَصَرْتُهُ, எத்தனையோ மனிதனுக்கு நான் உதவி யிருக்கின்றேன்.

خَلَا "தவிர" என்பது இதன் பொருள்.

ضَرَبْتُ الْأَطْفَالَ خَلَا زَيْدٍ ஜைதைத் தவிர (மற்ற) பிள்ளைகளை நான் அடித்தேன்.

حَاشَا தவிர مَنَعْتُ الرِّجَالَ حَاشَا عَمْرٍو நான் அம்ரைத் தவிர (மற்ற) மனிதர்களை விலக்கினேன்.

عَدَا தவிர جَاءَ الْقَوْمُ عَدَا خَالِدٍ காலிதைத் தவிர (மற்ற) ஜனங்கள் யாவரும் வந்தனர்.

ஆறும் பாடம்

ضَمَائِر

பிரதிப் பெயர் சொற்கள் (Pronouns)

ه அவனுடைய, அவனுக்கு

هُمَا அவ்விருவருடைய, அவ்விருவருக்கு (ஆண் பால், பெண்பால் பொது)

هُمْ அவர்களுடைய, அவர்களுக்கு (ஆண்பால்)

هَا அவளுடைய, அவளுக்கு

هُنَّ அவர்களுடைய, அவர்களுக்கு (பெண்பால்)

كَ உன்னுடைய, உனக்கு (ஆண்பால்)

كُمَا உங்கள் இருவருடைய, உங்கள் இருவருக்கு (பொதுப்பால்)

كُمْ உங்களுடைய, உங்களுக்கு (ஆண்பால்)

كِ உன்னுடைய, உனக்கு (பெண்பால்)

كُنَّ உங்களுடைய, உங்களுக்கு (பெண்பால்)

يَ என்னுடைய

نِي எனக்கு

نَا எங்களுடைய, எங்களுக்கு

இந்த பிரதிப் பெயர் (Pronouns) சொற்களை அர்த்தங்களுடன் மனப்பாடஞ் செய்துகொள்ளுக.

இவை مَفْعُولِي (Objective) செயப்படு பொருளையும் اِضَافِي (Possessive) சம்பந்த அல்லது உடைமைப் பொருளையும் விளக்குபவைகளாக இருக்கின்றன. இவை اسم பெயர் சொற்களுக்கும் فِعْل வினைச் சொற்களுக்கும் حَرْف உருபு என்னும் அட்சரங்களுக்கும் பின்னே வரக்கூடியவையாகும்.

பெயர் சொற்களுக்குப் பின்னே வருவதற்கு உதாரணம்.

قَلَمُهُ அவனுடைய எழுதுகோல்.

كِتَابُكَ உன்னுடைய புத்தகம்.

كِتَابِي என்னுடைய புத்தகம்.

كِتَابُهَا அவளுடைய புத்தகம்; என்பதாம்.

வினைச் சொற்களுக்குப் பின்னே வருவதற்கு உதாரணம்.

نَصَرْتُهُ அவனுக்கு உதவி செய்தேன்.

اَمَرْتُكَ உன்னை ஏவினேன்.

نَصَرْتَنِي எனக்கு நீ உதவி செய்தாய்; என்பனவாம்.

உருபுகளுக்குப் பின்னே வருவதற்கு உதாரணம்.

فِيهِ அதிலே.

لَهُ அதற்கு.

مِنْكَ உன்னிலிருந்து

إِلَيْنَا நமது பக்கம்.

إِنَّكُمْ நிச்சயமாக நீங்கள்.

عَلَيْهِ அவன் மீது.

கீழ்கண்ட தமிழ் வாசகங்களை அறபி பாஷையில் மொழிபெயர்க்குக:—

